முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 954

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.05.2022, செவ்வாய்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா போற்றி
ஞானிகள் பலம்கொண்ட தேசிகா போற்றி
வானவர்கள் துணைநிற்க வள்ளலாக
வாழுகின்ற ஞானியே போற்றிபோற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும்
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட சுபகிருது தகர் திங்களில் உரைப்பேன்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 27 ம் நாள், 10.05.2022 செவ்வாய்கிழமை)
அரங்கனே கலியின் சிறந்த ஞானி
3. ஞானியரின் உபதேசங்களே
நல்வழிகாட்டும் கலியுகத்தின் மார்க்கமாகும்
துணிவுபட அரங்கனை தொடர்ந்தால்
தேசமெங்கும் சன்மார்க்க சக்தி கூடி
4. கூடியே கலியுகத்தில் எங்கும் எதிலும் சமத்துவம்
குறையில்லாத தர்மபலமும் ஈடேறி
சுடரெனும் சரவண ஜோதி வழி
சூட்சுமமாக யாவர்க்கும் ஞானம் கிட்டி
5. கிட்டியே அரங்கன் வழி உலகோர்
குறையின்றி ஞானிகளாவர்
தட்டாது முன்மொழிந்து அரங்கன் வழிவர
தரணியில் சடுதி மாற்றம் அரங்கனைக்கொண்டு ஆறுமுகன் யானே நடத்துவேன்
6. நடத்துகின்ற இந்த அற்புதத்தை
ஞானிகள் துணைபட அரங்கனும் செய்துவர
தடையின்றி ஓங்காரக்குடில் நோக்கி
தரணியோர் வரவர இந்த அற்புதம் உலகமாற்றமாக சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–